1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளை வளர்ப்பதற்கு தனிப்பட்டவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகள் அல்லது விவசாயிகள் அவற்றை வைத்து வளர்க்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவ உதவிகள் போன்றவற்றை எல்லாம், இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. அரசு மட்டுமே பண்ணைகளை நடத்தி வருவதால் மக்களுக்குப் பயன் இராது என்பதை அரசு கருத்தில் கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளை வருகின்ற கால்நடை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தேன். அந்த நேரத்தில், என்னுடைய போளூர் பகுதியில் இப்படிப்பட்ட கன்றுகள் வளர்ப்புப் பண்ணை அமைப்பதற்காக ஏறத்தாழ 15 ஏக்கர் நிலத்தை பார்வையிட்ட போது அதற்குண்டான இடத்தினுடைய ''மேப்'' எல்லாம் தயார் செய்து கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட இடத்தில், இந்தத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சார்பில் செயல்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பண்ணை அமைக்க வேண்டிய கால கட்டம் வருகிற போது, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 256, செல்வி 256—எல். சுலோசனா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கல்லாறு அரசுப் பழப்பண்ணைப் பகுதியில் மூலிகைகள் வளர்த்தல்

*14236—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லாறு அரசுப் பழப்பண்ணைப் பகுதியில் மூலிகைகளை வளர்த்து சித்த மருத்துவத்திற்கு உதவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கல்லாறு பழப்பண்ணையில் மூலிகை வளர்ப்பு சம்பந்தமாக செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கல்லாறு அரசுப் பழப்பண்ணை சில ஹெக்டேர் பரப்பளவு கொண்டதாகவே இன்றும் உள்ளது. அதனை மேலும் பல ஹெக்டேர் பரப்பளவுக்கு விஸ்தரிக்க அரசு ஆவன செய்யுமா ? மேலும், இந்த பழ ஆராய்ச்சிப் பண்ணையில் ''துரியன்'' பழம் உள்ளதா? அதன் தன்மை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லாறு அரசுப் பழப்பண்ணையில் 8.92 ஹெக்டேர் பரப்பளவில் பழத்தோட்டம் இருக்கிறது. அதிலே 7 ஹெக்டேர் மட்டுமே இன்றைக்கு பழத்தோட்டமாக இருக்கிறது. மீதமுள்ள 1.92 ஹெக்டேர் பரப்பளவு சாகுபடிக்கு உகந்ததாக இல்லை. கல்லாறு அரசுப் பழப்பண்ணையில், மிகக் குறைந்த வெப்ப பிராந்திய பயிர் வகைகள் மற்றும் சுவைதானிய பயிர்களான மங்குஸ்தான், எலுமிச்சை, ஆரஞ்சு, நார்த்தங்காய், சப்போட்டா, பலா, கிராம்பு, கோக்கோ, ஜாதிக்காய், இலவங்கம், ரம்புட்டான், இத்தி ஆகிய பழ வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

முற்பகல் 11-05

விவசாயிகளுக்கு வேண்டிய தரமான கன்றுகளை உற்பத்தி செய்து நியாயமான விலையில் வழங்குவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு மாதிரி தோட்டக் கலைப் பண்ணையாக விளங்கி, விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி பற்றி விளக்கிக் கூற உதவுகிறது. சித்த மருத்துவ முறைக்கு உதவும் மூலிகைகளை வளர்க்கும் பொறுப்பினை சித்த மருத்துவத் துறை தனியாகக் கவனித்து வருகிறது. கல்லாறு பழப் பண்ணையில் துரியன் என்ற பழம் உற்பத்தி ஆகிறது. அது அரசுக்குத் தெரியும். இந்தப் பழம் அதிகமாக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மட்டுமே உள்ளது. இது ஒரு அருவருக்கத்தக்க மணத்தை உடையது. இதைச் சாப்பிட்டுப் பழக்கம் உள்ளவர்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இது உடம்புக்கு அதிகமான சத்தைக் கொடுக்கக் கூடியது. இது பலாப் பழம் போன்று சிறிய அளவில் மிகவும் கூர்மையான முட்

1993 ஏப்ரல் 6]

களை உடையது. இது இரவில் சுமார் 200 அடி உயரத்தில் உள்ள மரக் கிளையிலிருந்து தான் விழும். இப்பழம் பகலில் விழுந்ததாக யாரும் கண்டது இல்லை. இது மலட்டுத் தன்மையை நீக்கி, குழந்தைப் பேறு உருவாக்கும் சக்தி படைத்தது என்று மக்கள் மத்தியில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளதால், அதற்காக இப்பழத்தை பெறுவதற்கு கல்லாறு பழப் பண்ணையில் பழம் வேண்டி குழந்தை இல்லாதவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வருகிறார்கள். இந்தப் பழத்தைச் சாப்பிட்டவர்கள் இந்த மரத்தை வழிபாட்டிற்குரிய தெய்வமாக வணங்கி வருகின்றார்கள். ஒரு மரத்தில் $1\frac{1}{2}$விருந்து 2 கிலோ எடையுள்ள பழங்கள் சுமார் 50 முதல் 60 வரை மட்டுமே கிடைத்து வருகின்றன. இந்த மரத்தைப் பற்றி இன்றைக்கு மருத்துவத் துறையைச் சார்ந்த அறிவியல் வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்தியாவிலே இப்பண்ணைகளில் மட்டும் இம்மரம் இருப்பதாக இன்று கருதப்பட்டு வருகிறது.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வருடங்களாக சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களில் அங்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வருகின்ற உல்லாசப் பயணிகள் கல்லாறு பழப்பண்ணையைப் பார்வையிட்டுப் பயன்பெற மீண்டும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பார்வையாளர்களை அனுமதிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லாறு அரசு பழத் தோட்டம் பார்ப்பதற்கு கண்ணைக் கவரக்கூடிய எழில் கொஞ்சும் இடமாக இருக்கிறது. விடுமுறை நாட்களில் நிறைய உல்லாசப் பயணிகள் அந்தப் பழத் தோட்டத்திற்கு வருகிறார்கள். ஏற்கெனவே சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் போதிய பணியாளர்கள் அங்கு இல்லாத காரணத்தினால் அங்கே சில சமூக விரோதச் செயல்கள் நடைபெற்றதன் காரணமாக, சனி, ஞாயிறு போன்ற இரு விடுமுறை நாட்களில் யாரையும் அங்கே அரசு அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 257, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.